# Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
STC No. 446/2021

## Deposition of P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | ராமசாமி |
| Father's Name | : | வீரப்பன் |
| Village | : | கீரமங்கலம் (ஆலங்குடி) |
| Age | : | **55 /2022** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 14.06.2022**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் புகார்தாரராவேன். எனது முதல் விசாரணைசாட்சியத்தினை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் நான்சொன்ன சங்கதிகளின் அடிப்படையில் நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. எதிரியால் எனக்கு அளிக்கப்பட்ட ரூபாய் **3** இலட்சத்திற்கான ஆலங்குடி கிளை பாரத ஸ்டேட் வங்கியின் காசோலையின் அசல் ம.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி வழங்கிய காசோலையை மேற்படி வங்கியில் வசூலுக்காக செலுத்தியபோது எதிரியின் கையொப்பம் ஒத்துப்போகவில்லை**(Mismatch)** என்று காசோலையில் வங்கிமேலாளரால் மேலொப்பம் செய்து காசோலை திருப்பப்பட்டது. அசல் காசோலையில் காணப்படும் வங்கிமேலாளரின் மேலொப்பம் ம.சா.ஆ.**2** ஆகும். **01.04.2021** ம் தேதி எனது வழக்கறிஞரால் எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் ம.சா.ஆ.**3** ஆகும்.**01.04.2021** ம் தேதி எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்காக அஞ்சலக இரசீது அசல் ம.சா.ஆ.**4** ஆகும். **03.04.2022** ம் தேதியில் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரிபெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **5** ஆகும். புகாரில் வேண்டியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(எதிரிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)